# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.597 / 2023 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : தேவி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வெள்ளைமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் உறவுமுறை. ஆஜர் எதிரியை தெரியும். எதிரி எனது பக்கத்து தோட்டத்துக்காரர். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு எனது நாத்தனார் லட்சுமி காலை 6 மணிக்கு மாடுடன் தோட்டத்திற்கு கொண்டு சென்றார். அப்போது லட்சுமிக்கு தோட்டத்தில் வைத்து கரண்ட் பிடித்ததாக வித்யா சொன்னார். நானும், வித்யாவும், வனமும் தோட்டத்திற்கு சென்றபோது எதிரி பக்கத்து தோட்டத்திற்கு அனுமதியில்லாமல் கரண்ட் வயரை இழுத்து தண்ணீர் பாய்ச்சியிருக்கிறார். அப்போது லட்சுமி மிதித்து கரண்ட் பட்டு அவரது கை, காலிலும் காயம் ஏற்பட்டது. பிறகு உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி குடும்பத்திற்கும், எங்களது குடும்பத்திற்கும் இடையே தண்ணீர் பாய்ச்சுவது சம்மந்தமாக சிவில் வழக்கு நடைபெறுகிறது என்றால் எனக்கு தெரியாது. காயம்பட்டவர் எனது நாத்தனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லட்சுமியின் பேரன் எங்கள் ஊரில் தான்

உள்ளார். தோட்டத்தில் உள்ள கிணற்றிற்கும், எனது வீட்டிற்கும் இடையே சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் கண்ணால் பார்த்தால் தெரியும். போலீசார் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் தற்போது கூறியதை தான் கூறினேன். போலீசார் இரண்டாவது முறையும் வந்து விசாரித்தார்கள். அவ்வாறு விசாரணையின் போது வயர்களை போலீசார் எடுத்துச்சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.597 / 2023 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : வித்யா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வெள்ளைமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தி உறவுமுறை. ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 6.00 மணிக்கு எனது சித்தி லட்சுமி மாடு பிடித்து கொண்டு அவரது தோட்டத்திற்கு போனார். அந்த தோட்டம் எனது வீட்டிற்கு அருகில் உள்ளது. சற்று நேரத்தில் அம்மா என அலறல் சத்தம் கேட்டது. நான் ஓடி சென்று பார்த்தபோது எதிரி குணசேகரன் ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு மின்சாரத்தை கொண்டு சென்றார். அப்போது அந்த வயரை லட்சுமி மிதித்து கருகிய நிலையில் அவரது உடல் இருந்தது. பின்னர் உடனே அவரது பேரனுக்கு போன் செய்து வரவழைத்து ஆட்டோவில் ஏற்றி பெரியாஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் லட்சுமிக்கு இரண்டு விரல்கள் போய்விட்டது. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. எனக்கு திருமணம் முடிந்து 13 வருடங்கள் ஆகிறது. எனது மாமனார் போஸ்க்கும் மேற்படி தோட்டத்தில் பங்கு உண்டு என்றால் சரிதான். லட்சுமிக்கும் இந்த தோட்டத்தில் பங்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி லட்சுமி குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும், எனது மாமனார் குடும்பத்திற்கும்



தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுவது சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டு உசிலம்பட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.14-2018 என வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கை அ.சா.1ன் கணவர் ராஜேந்திரன் தாக்கல் செய்தார்

என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பு எதிரி அவரது தோட்டத்தில் போர் போட்டு தண்ணீர் பாய்ச்சினார் என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு எதிரி அவரது தோட்டத்திற்கு போர் போட்டு தண்ணீர் பாய்ச்சுகிறார் என்றால் சரிதான். மேற்படி தோட்டத்திற்கு இழுத்த கரண்ட் வயரை தான் லட்சுமி மிதித்தது. நான் விவசாயம் செய்து வருவதால் மோட்டார் போடுவது சம்மந்தமாக தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு மோட்டார் போடும்போது சாட்டர் பெட்டியை பட்டனை அழுத்தினால் தான் மோட்டார் இயங்கும் என்றால் சரிதான். சம்பவத்தின் போது தோட்டத்தில் மழை அதிகமாக பெய்ததால் கிணறு முழுவதும் தண்ணீர் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது மோட்டார் ஓடவில்லை என்றால் சரியல்ல, ஓடிக்கொண்டிருந்தது. வழக்கிற்காக ஓடிக்கொண்டிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோட்டார் பெட்டி தனியாகவும், மின்சார கம்பம் தனியாகவும் உள்ளது என்றால் சரிதான். தோட்டத்திற்கு செல்வதென்றால் சாட்டர் பெட்டிக்கும், மின்கம்பத்திற்கும் இடையே தான் பாதை இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி சாட்டர் பெட்டியிலிருந்து போருக்கும், கிணற்றிற்கும் மின்சார வயர் செல்கிறது என்றால் சரிதான். மேற்படி வயர் தரைவழியாக செல்கிறது. மேற்படி போருக்கு செல்லும் வயரும், மின்சார கம்பத்திற்கு செல்லும் வயரும் தடினமான வயர் என்றால் சரிதான். நான் லட்சுமியின் பேரனுக்கு எந்த அலைபேசி எண்ணிலிருந்து தகவல் சொன்னேன் என்றால் ஞாபகமில்லை. லட்சுமியின் பேரன் ராகேஷையும் போலீசார் விசாரித்தார்கள். போலீசார் சம்பவம் நடந்து 10 நாட்கள் கழித்து சம்பவம் நடந்த கிணற்றிற்கு அருகில் வைத்து விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. லட்சுமிக்கும், எதிரிக்கும், எனக்கும் கிணற்றில் தண்ணீர் பாய்ச்சுவது சம்மந்தாக சிவில் வழக்கு நடைபெறுவதால் லட்சுமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லட்சுமி தனக்கு தானே ஏற்படுத்திக்கொண்ட காயத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஓம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி.